2013 மே 13]

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் அவர்கள்.*

***திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே உயிரிழந்து, உடைமையிழந்து, நிலமும் வீடும் இழந்து, வாடி வறுமையிலிருந்த தமிழக மக்கள் தம்முடைய வாழ்வு இவ்வளவுதானா என்று வீழ்ந்து வேதனையாக இருந்த நேரம் அது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியை மதியால் வெல்லலாம் என்பது சான்றோர் வாக்கு. ஆம். இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆழ்ந்த மதிநுட்பத்தால், அறிவின் ஆற்றலால், தமிழக மக்கள் வாழ்வு வளம் பெற விதியை விதியால் வெல்லக் கூடிய வித்தையைக் கற்றவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தனது பொற்கால ஆட்சியிலே மக்கள் வாழ்வு வளம் பெற, மேலும் வளம்பெற பேரவை விதி 110-னைத் தொடர்ந்து நலத் திட்டங்ளை வாரி வழங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சி அமைகின்ற வகையிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இதே தேதியிலே, அதாவது 13-5-2011 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர்களில் பெருவாரியானவர்கள் வெற்றி பெற்றார்கள் என்ற செய்தி தமிழக மக்களல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) உலகவாழ் தமிழர்களுக்கெல்லாம் ஓர் இனிப்பான செய்தியாக அமைந்தது. ஆம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு, இதே நன்னாளில் அன்பு, அறிவு, துணிவு ஆகியவை ஒருங்கே பெற்ற எதிர்கால இந்தியாவை வழி நடத்தக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அன்னையாய், ஆசானாய், தெய்வமாய் விளங்குகின்ற பாரதத்தின் பிரதமராக வரக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பொற்பாதங்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6-வது அறிக்கையைக் குழுவின் சார்பாக பேரவைக்கு சமர்ப்பிக்கின்றேன்.*